6. பாதை முடிவடையும் இடம் - திரு. எச். எம். வங்சதிலகவின் வீட்டின் அருகில் மாதலாவ பாதையில்
7. காணியின் பெயர் - மீகஹமுலஹேன, நாயகெடிச்சிஹேன, கிதுல்கொடஹேன, பொஹொரபெஹென

| இடம் | வலம் |
|---|---|
| 1. பி. ஜீ. ஆர். மல்லிகா சந்திரலதா அவர்கள் | 1. பி. ஜீ. ஆர். மல்லிகா சந்திரலதா அவர்கள் |
| 2. எம். ஏ. டிங்கிரி பண்டா அவர்கள் | 2. எம். ஏ. டிங்கிரி பண்டா அவர்கள் |
| 3. எம். ஜீ. ஆர். வீரசிங்க அவர்கள் | 3. எம். ஜீ. ஆர். வீரசிங்க அவர்கள் |
| 4. ஆர். எம். சமிந்த குமார அவர்கள் | 4. ஆர். எம். சமிந்த குமார அவர்கள் |
| 5. எச். பி. ரணசிங்க அவர்கள் | 5. எச். பி. ரணசிங்க அவர்கள் |
| 6. ஆர். எம். வீரசிங்க அவர்கள் (ஆர். எம். பி. நிசாந்த வீரசிங்ஹ) | 6. ஆர். எம். வீரசிங்க அவர்கள் (ஆர். எம். பி. நிசாந்த வீரசிங்ஹ) |
| 7. ஆர். எம். தர்மசேன அவர்கள் | 7. ஆர். எம். தர்மசேன அவர்கள் |
| 8. ஆர். எம். தயாரத்ன அவர்கள் | 8. ஆர். எம். தயாரத்ன அவர்கள் |
| 9. பி. ஆர். ஆரியவதி அவர்கள் | 9. பி. ஆர். ஆரியவதி அவர்கள் |
| 10. ஆர். எம். ஜகத் குமார அவர்கள் | 10. ஆர். எம். ஜகத் குமார அவர்கள் |
| 11. எம். ஜீ. ஆர். ஆரியரத்ன அவர்கள் | 11. எம். ஜீ. ஆர். ஆரியரத்ன அவர்கள் |
| 12. ஆர். எம். விமலாவதி அவர்கள் | 12. ஆர். எம். விமலாவதி அவர்கள் |
| 13. எம். ஜீ. ஆர். கருணாரத்ன அவர்கள் | 13. எம். ஜீ. ஆர். கருணாரத்ன அவர்கள் |
| 14. ஆர். எம். வங்சதிலக அவர்கள் | 14. ஆர். எம். வங்சதிலக அவர்கள் |

3-1113

---

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பு மாநகர சபை

*1991.01.31 ஆந் திகதிய கொழும்பு மாநகர சபை உப விதிகளின் XXII ஆம் பிரிவின் உப ஏட்டின் 8 ஆவது உப பிரிவின்கீழ் கொழும்பு மாநகர சபையினால் கொழும்பு நகரின் வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களுக்கு கட்டணம் அறவிடுவது தொடர்பாக 1989, சனவரி மாதம் 20 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானஅறிவித்தலின் XVIII ஆவது பரிவின் இல. 9(அ) விதிகளின்கீழ் கட்டணத்தினைத் திருத்துதல்*

2012, நவெம்பர் 26 ஆந் திகதி நடைபெற்ற கொழும்பு மாநகர சபையின் 1164 ஆம் இலக்க தீர்மானத்திற்கமைய 2012 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் மேற்கொள்ளப்படும் திருத்தத்தின் பிரகாரம் மக்களுக்கு அறிவிப்பதற்காக வர்த்தமானி அறிவித்தல் மூலம் தெரிவிக்கும் வரையும் கொழும்பு நகரின் வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களில் அறவிடப்படும் கட்டணம் அறவிடுவது கீழே காணப்படும் உப ஏட்டில் காணப்படும் முறையில் கட்டணத்தினைத் திருத்துதல் தொடர்பாக மக்களுக்கு தெரிவிப்பதற்கு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

திருத்தப்பட்ட இந்தப் புதிய கட்டணம் அறவிடுதல் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

ஜே. எம். பத்ராணி ஜயவர்தன,
மாநகர ஆணையாளர்,
கொழும்பு மாநகர சபை.

கொழும்பு மாநகர சபை,
நகர மண்டபம்,
கொழும்பு 07,
2013, பெப்புருவரி 16.

**அட்டவணை**

*8 ஆவது துணைவிதி*

| வாகன வகை | வாகனம் நிறுத்தும் கட்டணம் மணிக்கு ரூபா |
|---|---|
| கார் வான் மற்றும் ஜீப் | 30 |
| பஸ் லொறி | 50 |
| முச்சக்கர வண்டி | 20 |
| சைக்கிள் வண்டி | 10 |

பாடசாலை வான் ஒன்றிற்கு மாதம் 600 ரூபாவும் பாடசாலை பஸ் ஒன்றிற்கு மாதம் 1,000 ரூபாவும் அறவிடப்படும்.

3-1061

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

*வியாபார அனுமதிப்பத்திர கட்டணங்கள் – வரி அறவிடப்படுதல் – 2013*

***1972 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, 1985 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மற்றும் 1986 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க மாநகர சபைகள் திருத்தச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட இலங்கை சட்டவாக்க சட்டக் கோவையின் 252 ஆம் அத்தியாயமாகிய மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(அ), 247(ஆ) மற்றும் 247(இ) ஆகிய பிரிவுகளின்கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகர சபையினால் 2013 ஆம் ஆண்டுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் வரி அறவிடப்படுதல்***

*2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் 25 ஆந் திகதி நடத்தப்பட்ட மாநகர சபையின் 06-01 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிலும் அதனகத்துப் பின்னரும் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களை உரிய முறையில் பொது மக்கள் அறிந்துகொள்வதற்காக வர்த்தமான அறிவித்தல்களின் மூலம் பகிரங்கப்படுத்தப்படும்வரை ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகர சபையினால் பின்வரும் வகையில் கைத்தொழில் சார்ந்த விடயத்தில் மற்றும்/ அல்லது வர்த்தக வியாபாரம் சார்ந்த விடயத்தில் வரி விதிக்கப்பட்டு வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணங்கள் அறவிடப்படுமென சகலரும் அறிந்துகொள்ளும் முகமாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*1. (1) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(அ) பிரிவின்கீழ் வருகின்ற வியாபாரங்களுக்கு குறித்த இடத்திற்கான வருடாந்தப் பெறுமதியின் அடிப்படையில் அட்டவணை இலக்கம் 1 இன்படி 2013 ஆம் ஆண்டின் பொருட்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*(2) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(ஆ) பிரிவின்கீழ் வருகின்ற கைத்தொழில் விடயம் சார்ந்த வரியானது குறித்த இடத்திற்கான வருடாந்தப் பெறுமதியின் அடிப்படையில் அட்டவணை இலக்கம் 2 இன்படி 2013 ஆம் ஆண்டின் பொருட்டு செலுத்தப்படுதல் வேண்டும்.*

*(3) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(இ) ஆம் பிரிவின்கீழ் வருகின்ற வியாபார விடயம் சார்ந்த வரியானது சம்பந்தப்பட்ட வியாபாரத்திலிருந்து கடந்த வருடம் கிடைக்கப்பெற்ற பெறுகைகளின் அடிப்படையில் அட்டவணை இலக்கம் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2013 ஆம் ஆண்டுக்காக செலுத்தப்படுதல் வேண்டும்.*

*(4) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(அ) பிரிவின்கீழ் இலங்கை சுற்றுலாச் சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள அல்லது அச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு ஹோட்டல், உணவகம் அல்லது தங்கல் விடுதி குறித்த வியாபாரத்திற்கான கடந்த வருடப் பெறுகைகளிலிருந்து நூற்றுக்கு ஒரு வீதம் (1%) அனுமதிப்பத்திரக் கட்டணமாக 2013 ஆம் ஆண்டின் பொருட்டு செலுத்துதல் வேண்டும்.*

*மேற்படி சுற்றுலாச் சபையில் பதிவுசெய்யப்படாதுள்ள அல்லது அச்சபையினால் அங்கீகரிக்கப்படாதுள்ள ஒரு ஹோட்டல், உணவகம் அல்லது தங்கல் விடுதி குறித்த வியாபாரத்திற்கான இடத்தின் வருடாந்தப் பெறமதியின் அடிப்படையில் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை 247 (அ) ஆம் பிரிவின்கீழ் செலுத்துதல் வேண்டும்.*

*2. பின்வரும் அட்டவணைகளில் விதிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களைப் பெறுதல், வரிப்பணம் செலுத்துதல் சம்பந்தமான உரிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும்/அல்லது உரிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் போன்றவற்றை 2013, சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னர் நகர ஆணையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதோடு மேற்படி அனுமதிப்பத்திர கட்டணங்களையும், வரிகளையும் செலுத்துமாறு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் அவற்றை சபைக்குச் செலுத்தவும் வேண்டும்.*

*3. 2013 ஆம் ஆண்டுக்காக பின்வரும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களையும் வரிகளையும் அறவிடும்போது கீழே காட்டப்பட்டுள்ள அடிப்படையில் நடவடிக்கைகள் இடம்பெறும் :*

*(1) நபரொருவர் ஒரு சோலைவரி இலக்கத்தின்கீழ் ஒரு மாடியை அல்லது சில மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றில் அல்லது சில கட்டிடங்களில் ஒரே வியாபாரத்தைப் பேணி வருவாராயின், வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அல்லது வரிகளை கணக்கிடுவதற்காக மட்டும் அதனை ஒரு ஸ்தலமாகக் கருதி அனுமதிப்பத்திரக் கட்டணம் அல்லது வியாபார வரி அறவிடப்படும்.*

*(2) நபரொருவர் ஒரு சோலைவரி இலக்கத்தின்கீழ் ஒரு மாடியை அல்லது சில மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றில் அல்லது சில கட்டிடங்களில் பல்வகையான வியாபாரங்களைப் பேணி வருவாராயின், அந்த ஒவ்வொரு வியாபாரத்திற்கும் அல்லது கைத்தொழிலுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ள நிலப்பரப்புக்கு ஏற்ப வருடாந்தப் பெறுமதியை பகுதிகளாகப் பிரித்து அல்லது வியாபாரத்தின் பெறுகைகளைப் பகுதிகளாகப் பிரித்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அல்லது வியாபார வரி தனித்தனியாக அறவிடப்படும்.*

*(3) நபரொருவர் ஒரே வகையான வியாபாரமொன்றைப் பேணி வருகின்ற கட்டிடமானது பல சோலைவரி இலக்கங்களைக் கொண்ட கட்டிடமாக அமையும்போது, அது ஒரு சோலைவரி இலக்கத்தின்கீழ் பேணப்பட்டு வருகின்ற வியாபாரமாகக் கருதி வியாபார வரி அல்லது அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படும்.*

இருப்பினும் குறித்த இடத்தின் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் அல்லது வியாபார வரியின் உச்சப் பெறுமதியானது 5,000 ரூபாவுக்குக் குறைவாக இருக்குமானால், அத்தகைய சந்தர்ப்பத்தில் மேற்படி எல்லாக் கட்டிடங்களுக்குமான சோலைவரி இலக்கங்களினதும் வருடாந்தப் பெறுமதியை ஒருங்கிணைத்துக் கிடைக்கின்ற மொத்த வருடாந்தப் பெறுமதியின் பிரகாரம் அனுமதிப்பத்திரக் கட்டணம் அல்லது வியாபார வரி தீர்மானிக்கப்படும்.

(4) நபரொருவர் பல சோலைவரி இலக்கங்களின்கீழ் பல்வகையான வியாபாரங்களைப் பேணி வருகின்ற சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட சோலைவரி இலக்கங்கள் ஒன்றுடனொன்று இணைந்து அமைந்திருந்தாலும் அவரது ஒவ்வொரு வியாபாரம் அல்லது கைத்தொழில் சார்பாக தனித்தனியாக அனுமதிப்பத்திரக் கட்டணம் அல்லது வியாபார வரி அறவிடப்படும்.

(5) ஒரு சோலைவரி இலக்கத்தின்கீழ் பல நபர்கள் பல வியாபாரங்களைப் பேணி வருவார்களாயின் குறித்த ஒவ்வொரு வியாபாரத்திற்குமாகப் பயன்படுத்தப்படுகின்ற ஸ்தலத்தின் வருடாந்தப் பெறுமதியின் பிரகாரம் குறித்த வியாபார ஸ்தலத்தின் வருடாந்தப் பெறுமதியைப் பகுதிகளாகப் பிரித்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அல்லது வியாபார வரி தனித்தனியாக அறவிடப்படும். அனுமதிப்பத்திரக் கட்டணங்களையும் வியாபார வரிகளையும் தீர்மானிக்கும் அதிகாரத்தினை சபை கொண்டுள்ளது.

4. 2013 ஆம் ஆண்டின் பொருட்டு செலுத்தப்படவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் வரிகள் 2013 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டுமென்பதை இத்தால் மேற்கொண்டும் அறியத்தருகின்றேன்.

சாந்தா பீ. லியனகே,
மாநகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.

மாநகரசபை அலுவலகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
இராஜகிரி,
2012, நவெம்பர் 05.

### அட்டவணை - இலக்கம் 01

### 247(அ) ஆம் பிரிவின்கீழ் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்படுதல்

**(அ) வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களுக்கான அட்டவணை :**

(1)

| நிலையத்தின் வருடாந்தப் பெறுமதி | அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 1 தொடக்கம் 15,000 வரை | 750 0 |
| 15,001 தொடக்கம் 20,000 வரை | 1,000 0 |
| 20,001 தொடக்கம் 25,000 வரை | 1,500 0 |
| 25,001 தொடக்கம் 30,000 வரை | 2,000 0 |
| 30,001 தொடக்கம் 35,000 வரை | 2,500 0 |
| 35,001 தொடக்கம் 40,000 வரை | 3,000 0 |
| 40,001 தொடக்கம் 45,000 வரை | 3,500 0 |
| 45,001 தொடக்கம் 50,000 வரை | 4,000 0 |
| 50,001 தொடக்கம் 55,000 வரை | 4,500 0 |
| 55,001 தொடக்கம் 60,000 வரை | 5,000 0 |

(2) இலங்கைச் சுற்றுலாச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஹோட்டல்கள், உணவகங்கள் அல்லது தங்கல் விடுதிகள் குறிப்பிட்ட வியாபாரத்திற்கான கடந்த வருடப் பெறுகைகளின் மீது நூற்றுக்கு ஒன்றிலான (1%) அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

**(ஆ) வியாபார அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டிய வியாபார நடவடிக்கைகள் பற்றிய பட்டியல்**

(1) கோழிகளை வளர்த்தல்
(2) மிருக வைத்தியசாலையொன்றைப் பேணி வருதல்
(3) கூரை ஓடு, கொங்கிறீட் குழாய்கள் அல்லது ஏனைய கொங்கிறீட் பொருட்களை உற்பத்தி செய்தல்
(4) 1,250 கிலோ கிராமுக்கு மேற்பட்ட அளவு சீமெந்தினைக் களஞ்சியம் செய்தல்
(5) இன்ஜெக்டர் பம்ப் சர்விஸ் செய்யப்படுகின்ற நிலையமொன்றைப் பேணி வருதல்
(6) டயர்களை மீள் நிரப்பும் அல்லது வாகனச் சக்கரங்களில் குறுவெட்டும் நிலையமொன்றைப் பேணி வருதல்

(7) மரத்தளபாடங்களை உற்பத்தி செய்வதற்காக மற்றும்/ அல்லது களஞ்சியப்படுத்துவதற்காக மற்றும்/ அல்லது வியாபாரம் செய்வதற்காக நிலையமொன்றைப் பேணி வருதல்
(8) மா அல்லது வாசனைத் திரவிய வகைகளை அரைத்தல்
(9) இறப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல்
(10) பாதணிகள் மற்றும்/அல்லது பூட்சுக்கள் உற்பத்தி செய்யப்படுதல்
(11) இயந்திரங்களின் மூலம் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுதல்
(12) துணி வகைகளை உற்பத்தி செய்தல் மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தல்
(13) 500 இற்கு மேற்பட்ட கூரை ஓடுகளை களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சியமொன்றை அல்லது முற்றமொன்றைப் பேணி வருதல்
(14) 250 இற்கு மேற்பட்ட செங்கற்களை களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சியமொன்றை அல்லது முற்றமொன்றைப் பேணிவருதல்
(15) 250 இற்கு மேற்பட்ட கபுக் கற்களை களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சியமொன்றை அல்லது முற்றமொன்றைப் பேணிவருதல்
(16) இனிப்புப் பண்டங்களைத் தயாரித்தல்
(17) மோட்டார் வாகனங்களைத் திருத்துவதைத் தவிர்ந்த இரும்பு மற்றும்/அல்லது வேலைத்தளமொன்றைப் பேணி வருதல்
(18) மோட்டார் வாகனங்களைத் திருத்துகின்ற கராஜ், இரும்பு மற்றும்/அல்லது உருக்கு வேலைத்தளமொன்றைப் பேணி வருதல்
(19) மோட்டார் வாகனங்களைத் திருத்தும் வேலைத்தளமொன்றைப் பேணி வருதல்
(20) மோட்டார் வாகனங்கள் சர்விஸ் செய்யப்படும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(21) இயந்திரங்களின் மூலம் இயக்கப்படுகின்ற அச்சகமொன்றைப் பேணி வருதல் (25 ஊழியர்கள் அல்லது அதற்கு மேல்)
(22) தும்பு, மெத்தை, குஷன் போன்றவற்றை உற்பத்தி செய்தல் மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தல்
(23) புதிய டயர்கள் அல்லது ரியூப்புகள் 50 இற்கு மேல் களஞ்சியப்படுத்தல்
(24) மின் சக்தியின்றி இயந்திரங்களின் மூலம் இயக்குகின்ற குளிரூட்டிகளைத் திருத்தும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(25) இயந்திரங்களின் மூலம் ஆடைகளைத் தைக்கும் வியாபாரமொன்றைப் பேணி வருதல்
(26) பட்டாசுகளைக் களஞ்சியப்படுத்துதல்
(27) வீட்டுத் தரையில் பொலிஷ் களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல்
(28) குளிரூட்டிகளைத் திருத்துதல், மீள் உற்பத்தி செய்தல் மற்றும் பரிசோதித்தல் என்பவற்றுக்காக நிலையமொன்றைப் பேணி வருதல்
(29) மோட்டார் சைக்கிள்களை அல்லது ஸ்கூட்டர்களை சேகரிக்கும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(30) சட்டி, பானைகள் அல்லது செங்கற்கள் சூளையொன்றைப் பேணி வருதல்
(31) பப்படம் தயாரித்தல் மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்துதல்
(32) ஹோட்டலொன்றைப் பேணி வருதல்
(33) விருந்தினர் விடுதியொன்றைப் பேணி வருதல்
(34) கறவை மாட்டுப் பட்டியொன்றைப் பேணி வருதல்
(35) தானிய விற்பனை நிலையமொன்றைப் பேணி வருதல்
(36) மை அல்லது வார்ணிஷ் தயாரித்தல் மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தல் மற்றும்/அல்லது வியாபாரம் செய்தல்
(37) கைகளால் இயக்கப்படுகின்ற அச்சகமொன்றைப் பேணி வருதல்
(38) பழைய இரும்புகளைக் களஞ்சியப்படுத்தல்
(39) 100 இற்கு மேற்பட்ட வெற்றுப்போத்தல்களைக் களஞ்சியப்படுத்தல்
(40) சவப்பெட்டிகளை உற்பத்தி செய்தல் மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தல்
(41) பயன்படுத்தப்பட்ட இறப்பர் டயர் அல்லது ரியூப் 100 இற்கு மேல் களஞ்சியப்படுத்தல்
(42) பயன்படுத்தப்பட்ட ஆடைகளை களஞ்சியப்படுத்தல்
(43) 250 கிலோ கிராமுக்கு மேற்பட்ட புதிய மற்றும்/அல்லது பழைய கடதாசிகளை களஞ்சியப்படுத்தல்
(44) இயந்திரங்களால் இயக்கப்படாத மின் முலாம், தங்க முலாம், வெள்ளி முலாம் அல்லது வெண்கல முலாம் பூசப்படுகின்ற நிலையமொன்றைப் பேணி வருதல்
(45) விறகுக் கொட்டில் ஒன்றைப் பேணி வருதல்
(46) இயந்திரங்களால் இயக்கப்படுகின்ற அச்சகமொன்றைப் பேணி வருதல்
(47) ஆடைகளை உலர் சலவை செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(48) தேநீர் சாலையொன்றைப் பேணி வருதல்
(49) சாப்பாட்டுக் கடையொன்றைப் பேணி வருதல்
(50) விடுதியொன்றைப் பேணி வருதல்
(51) உணவகமொன்றைப் பேணி வருதல் (பெரும்பாலும் தமது அங்கத்தவர்களுக்காக மட்டும் நலனோம்பல் சங்கங்களால் நடத்தப்படுகின்ற உணவகங்கள் அனுமதிப்பத்திர கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.)
(52) வெதுப்பகமொன்றைப் பேணி வருதல்
(53) சலூன்/மேனி வனப்புக் கலைக்கூட நிலையமொன்றைப் பேணி வருதல்
(54) சலவை நிலையம் ஒன்றைப் பேணி வருதல்
(55) சுண்ணாம்பு களஞ்சியப்படுத்தல்
(56) டயர், ரியூப் வோல்கனைஸ் செய்யப்படும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(57) இயந்திரங்களினால், மின்சக்தியினால் அல்லது ஆவியினால் இயக்கப்படுகின்ற எந்தவொரு வகையையும் சேர்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதற்காக தொழில்நுட்ப நிலையமொன்றைப் பேணி வருதல்
(58) தனியார் மருத்துவமனைகள்
(59) தைத்த ஆடைக் கைத்தொழிற்சாலையொன்றைப் பேணி வருதல்
(60) மாட்டிறைச்சிக் கடையொன்றைப் பேணி வருதல்

(61) பன்றியிறைச்சிக் கடையொன்றைப் பேணி வருதல்
(62) கோழியிறைச்சிக் கடையொன்றைப் பேணி வருதல்
(63) மரக்கறி வியாபாரமொன்றைப் பேணிவருதல்
(64) 10 அரிசி மூட்டைகளுக்கு மேலதிகமாக களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
(65) தொலைக்காட்சி, வானொலி இயந்திரங்களைத் திருத்தும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(66) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு குடிபான நிலையமொன்றைப் பேணி வருதல்
(67) மீன் வியாபார நிலையமொன்றைப் பேணி வருதல்
(68) பாடல்களை ஒலிப்பதிவு செய்கின்ற மற்றும் விற்பனை செய்கின்ற நிலையமொன்றைப் பேணி வருதல்
(69) சீன மதுச்சாலையொன்றை, சீன உணவு வழங்கும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(70) அலங்கார மீன் பண்ணையொன்றைப் பேணி வருதல்
(71) குளிரூட்டப்பட்ட மீன் மற்றும் இறைச்சி விற்பனை நிலையமொன்றைப் பேணி வருதல்
(72) வாகனங்களைக் குஷன் செய்தல்
(73) கள்ளுத் தவறணையொன்றைப் பேணி வருதல்
(74) சாராயத் தவறணையொன்றைப் பேணி வருதல்
(75) பிளாஸ்ரிக் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(76) பழ வகைகளைக் கொண்டு உணவு உற்பத்தி செய்யப்படும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(77) முன்பள்ளி உபகரணங்களை உற்பத்தி செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(78) பிளாஸ்ரிக் மற்றும் வேறு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி விளம்பரப் பலகைகளை உற்பத்தி செய்தல்
(79) மை வகைகளை உற்பத்தி செய்கின்ற நிலையமொன்றைப் பேணி வருதல்
(80) பயணப் பைகளை உற்பத்தி செய்தல்
(81) மீன் வர்த்தக நிலையமொன்றைப் பேணி வருதல்
(82) விளையாட்டு அரங்கு ஒன்றைப் பேணி வருதல்
(83) கணனி சம்பந்தப்பட்ட விளையாட்டு நிலையமொன்றைப் பேணி வருதல்
(84) எரிபொருள் நிரப்பு நிலையமொன்றைப் பேணி வருதல்
(85) கட்டிட அமைப்பு/உள்ளக அலங்காரம் செய்தல்
(86) குழாய்க்கிணறுகளை உற்பத்தி செய்தல்
(87) பூங்காக்களை அழகுபடுத்தல்
(88) தயாரிக்கப்பட்ட உணவுப் பானங்களை வெளியில் கொண்டு செல்வதற்கான வர்த்தக நிலையங்கள்
(89) வாகன விற்பனை நிலையமொன்றைப் பேணி வருதல்
(90) தனியார் வகுப்புக்கள், சர்வதேச பாடசாலைகள் பேணப்படுதல்
(91) திரைப்பட மாளிகை ஒன்றைப் பேணி வருதல்
(92) மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யப்படும் இடமொன்றைப் பேணி வருதல்
(93) பழவகை விற்பனை நிலையமொன்றைப் பேணி வருதல் (சுயதொழில்)
(94) குளிர்பானங்களை விற்பனை செய்தல் மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தும் இடமொன்றைப் பேணி வருதல்
(95) உணவு வகைகள் மற்றும் வாசனைத் திரவியங்கள் வியாபாரம் மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்றைப் பேணி வருதல்
(96) மதியநேர பாதுகாப்பு நிலையம் ஒன்றை/முன்பள்ளியொன்றைப் பேணி வருதல்
(97) மேற்கத்தேய ஔடத வகைகளை வியாபாரம் செய்யும் நிலையம் ஒன்றைப் பேணி வருதல்
(98) ஸ்பா/உடல் பிடித்துவிடும் நிறுவனமொன்றைப் பேணி வருதல்
(99) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247அ பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டி இருப்பினும் மேலே குறிப்பிடப்படாத வியாபாரங்களைப் பேணி வருதல்

**குறிப்பு**.- 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணங்கள் சிறப்பேற்பாடுகள் சட்டத்தின் கீழ் வர்த்தகமொன்றை/வியாபாரமொன்றை மேற்கொள்வதற்காக வழங்கப்படுகின்ற ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திற்காகவும் அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 10% அல்லது 1,000 ரூபா ஆகிய இரண்டில் ஆகக்குறைந்த அளவு முத்திரைக் கட்டணமாக செலுத்தப்படுதல் வேண்டும்.

**அட்டவணை - இலக்கம் 02**

**கைத்தொழில் விடயம் சார்ந்த வரி அறவிடப்படுதல் 247(அ) பிரிவு**

(அ) கட்டண அட்டவணை

| (1) இடத்தின் வருடாந்தப் பெறுமதி | வரித்தொகை ரூபா ச. |
|---|---|
| 1 தொடக்கம் 15,000 வரை | 750 0 |
| 15,001 தொடக்கம் 20,000 வரை | 1,000 0 |
| 20,001 தொடக்கம் 25,000 வரை | 1,500 0 |
| 25,001 தொடக்கம் 30,000 வரை | 2,000 0 |

| *இடத்தின் வருடாந்தப் பெறுமதி* | *வரித்தொகை ரூபா ச.* |
|---|---|
| 30,001 தொடக்கம் 35,000 வரை | 2,500 0 |
| 35,001 தொடக்கம் 40,000 வரை | 3,000 0 |
| 40,001 தொடக்கம் 45,000 வரை | 3,500 0 |
| 45,001 தொடக்கம் 50,000 வரை | 4,000 0 |
| 50,001 தொடக்கம் 55,000 வரை | 4,500 0 |
| 55,001 தொடக்கம் 60,000 வரை | 5,000 0 |

*கைத்தொழில் பட்டியல் :*

(1) மின் உபகரணங்களைத் திருத்தும் மற்றும்/அல்லது விற்பனை செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(2) அலுவலகப் பொருட்களை களஞ்சியப்படுத்தும் மற்றும்/அல்லது விற்பனை செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(3) பயன்படுத்தப்பட்ட மற்றும் புதிய மோட்டார் வண்டிகளை இறக்குமதி செய்யும் மற்றும்/ அல்லது விற்பனை செய்யும் நிலையமொன்றினைப் பேணி வருதல்
(4) சமிக்ஞைக் கோபுரம் ஒன்றைப் பேணி வருதல்
(5) குளிரூட்டிகளை விற்பனை செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(6) கண்ணாடிப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(7) தொலைக்காட்சி இயந்திரங்களை இறக்குமதி செய்கின்ற மற்றும்/ அல்லது வியாபாரம் செய்கின்ற நிலையமொன்றைப் பேணி வருதல்
(8) வெற்றிலை, புகையிலை போன்ற பொருட்களை வியாபாரம் செய்தல்
(9) ஆடை அணிகலன்களை வியாபாரம் செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(10) வளிச்சீராக்கி உபகரணங்களை வியாபாரம் செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(11) பாதுகாப்புச் சேவை வழங்கப்படும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(12) இரும்புப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(13) சிகரெட் விற்பனை நிலையமொன்றைப் பேணி வருதல்
(14) தைத்த ஆடைகளை விற்பனை செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(15) காகிதாதிகளை வியாபாரம் செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(16) கடிகார வியாபார நிலையமொன்றைப் பேணி வருதல்
(17) உள்ளகச் செய்திகளை பரிமாற்றம் செய்யும் உபகரணங்களை வியாபாரம் செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(18) தனியார் தபால் நிலையமொன்றைப் பேணி வருதல்
(19) இரும்புத் தகடுகள் மற்றும் அலுமினியத் தகடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட வேலைத்தளமொன்றைப் பேணி வருதல்
(20) மீன்பிடி உபகரணங்களை வியாபாரம் செய்யும் மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(21) கேக் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களை வியாபாரம் செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(22) வானொலி இயந்திரங்களுக்காக உதிரிப்பாகங்களை வியாபாரம் செய்யும் மற்றும்/ அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(23) பீங்கான் பொருட்களை வியாபாரம் செய்யும் மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(24) பரிசுப் பொருட்களை வியாபாரம் செய்யும் மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(25) வங்கிகள் அல்லாத நிதி நிறுவனமொன்றைப் பேணி வருதல்
(26) கடதாசிப் பைகளை தயாரிக்கின்ற மற்றும்/அல்லது விற்பனை செய்கின்ற நிறுவனமொன்றைப் பேணி வருதல்
(27) சில்லறை வர்த்தக நிலையமொன்றைப் பேணி வருதல்
(28) சாப்புப் பொருட்கள் வர்த்தக நிலையமொன்றைப் பேணி வருதல்
(29) நிழற்பிரதி எடுக்கும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(30) கைத்தறி உற்பத்திகளை விற்பனை செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(31) புத்தக விற்பனை நிலையமொன்றைப் பேணி வருதல்
(32) அலங்காரப் பொருட்களை வியாபாரம் செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(33) வீடியோ நாடாக்களை விற்பனை செய்தல் மற்றும்/அல்லது வாடகைக்கு வழங்குதல்
(34) தராசுகளைத் திருத்தும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(35) மலர் விற்பனை நிலையமொன்றைப் பேணி வருதல்
(36) தேங்காய் விற்பனை நிலையமொன்றைப் பேணி வருதல்
(37) பால் உணவுப் பொருள் விற்பனை நிலையமொன்றைப் பேணி வருதல்
(38) தையல் நிலையமொன்றைப் பேணி வருதல்
(39) மரக்கறி வியாபார நிலையமொன்றைப் பேணி வருதல்
(40) கணனி இயந்திரங்கள் தொடர்பாக பயிற்சி வழங்கும் நிறுவனமொன்றைப் பேணி வருதல்

(41) பல் சிகிச்சை பற்றிய தொழில்நுட்ப நிறுவனமொன்றைப் பேணி வருதல்
(42) காப்புறுதி முகவர் நிறுவனமொன்றைப் பேணி வருதல்
(43) ஆலோசனைச் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றைப் பேணி வருதல்
(44) கனியப்பொருள் வர்த்தகத்திற்கான நிறுவனமொன்றைப் பேணி வருதல்
(45) அலுமினியப் பொருள் வியாபாரத்திற்கான நிறுவனமொன்றைப் பேணி வருதல்
(46) அறுக்கப்பட்ட மரங்களை களஞ்சியப்படுத்துவதற்கான மற்றும்/அல்லது வியாபாரத்திற்கான நிலையமொன்றைப் பேணி வருதல்
(47) நூல் உற்பத்தி செய்வதற்கான மற்றும்/அல்லது வியாபாரத்திற்கான நிலையமொன்றைப் பேணி வருதல்
(48) பழங்களிலான குளிர்பானங்களைத் தயாரிக்கும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(49) இறப்பர் இலச்சினை மற்றும்/அல்லது ப்ளொக் அச்சுக்களைத் தயாரிக்கும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(50) வியாபார நடவடிக்கைகளுக்காக அலுவலகமொன்றைப் பேணி வருதல்
(51) ஔடத நிறுவனமொன்றைப் பேணி வருதல்
(52) நிழற்பிரதிகளைத் தயாரித்தல்
(53) தொலைபேசி நிலையமொன்றை/தொடர்பாடல் நிலையமொன்றைப் பேணி வருதல்
(54) பாடல்களை ஒலிப்பதிவு செய்கின்ற மற்றும் விற்பனை செய்கின்ற நிலையமொன்றைப் பேணி வருதல்
(55) இரத்தினக்கல் கொள்வனவு செய்யும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(56) தங்க நகைகளை அடகுபிடிக்கும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(57) உடற்கட்டு வளர்ச்சி நிலையமொன்றைப் பேணி வருதல்
(58) வாகன உதிரிப்பாகங்களைச் சேகரிக்கும் நிலையமொன்றைப் பேணி வருதல்
(59) மலர்ச்செடிகளை அல்லது வேறு செடிகளை விற்பனை செய்தல்
(60) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247ஆ பிரிவின்கீழ் வரி செலுத்தவேண்டி இருப்பினும் மேலே குறிப்பிடப்படாத வியாபாரங்களைப் பேணிவருதல்

***அட்டவணை இலக்கம் 03***

***மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (247) இ பிரிவு***

*(அ) வர்த்தக வியாபாரத்திலிருந்து கடந்த வருடம் கிடைக்கப்பெற்ற பெறுகைகளின் மீதான வரி அட்டவணை*

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் |
|---|---|
| கடந்த வருடத்தில் வியாபாரத்தின் பெறுகைகள் | செலுத்தப்படவேண்டிய வரி |
| | ரூபா ச. |
| 6,000 ரூபாவை விஞ்சாதபோது | இல்லை |
| 6,000 ரூபாவை விஞ்சினாலும் 12,000 ரூபாவை விஞ்சாதபோது | 90 0 |
| 12,000 ரூபாவை விஞ்சினாலும் 18,750 ரூபாவை விஞ்சாதபோது | 180 0 |
| 18,750 ரூபாவை விஞ்சினாலும் 75,000 ரூபாவை விஞ்சாதபோது | 360 0 |
| 75,000 ரூபாவை விஞ்சினாலும் 1,50,000 ரூபாவை விஞ்சாதபோது | 1,200 0 |
| 1,50,000 ரூபாவை விஞ்சும்போது | 3,000 0 |

*(ஆ) வியாபாரப் பட்டியல்*

(1) பிரசித்திபெற்ற நொத்தாரிசாகச் செயற்படுதல்
(2) சட்டத்தரணியாகச் செயற்படுதல்
(3) மேற்கத்தேய மருத்துவராகச் செயற்படுதல்
(4) சுதேச மருத்துவராகச் செயற்படுதல்
(5) தனிப்பட்ட பொறியியலாளராகச் செயற்படுதல்
(6) பொருட்களை அடகுபிடிப்பவராகச் செயற்படுதல்
(7) பணம் கடன் கொடுப்பவராகச் செயற்படுதல்
(8) வருமான வரி அல்லது தொழில் சட்ட ஆலோசகராச் செயற்படுதல்
(9) பிரசித்திபெற்ற நிலஅளவையாளராகச் செயற்படுதல்
(10) ஏல விற்பனையாளராக அல்லது தரகராகச் செயற்படுதல்
(11) கணக்குப் பரிசோதகராக செயற்படுதல்
(12) கட்டிடக் கலைஞராக செயற்படுதல்

(13) போக்குவரத்துச் சேவை உரிமையாளராக அல்லது வாகன முகவராகச் செயற்படுதல்
(14) ஒப்பந்தக்காரராகச் செயற்படுதல்
(15) அதிஷ்டலாபச் சீட்டு முகவராகச் செயற்படுதல்
(16) தனியார் பல் மருத்துவராகச் செயற்படுதல்
(17) தரகு முகவராகச் செயற்படுதல்
(18) தனியார் பேரூந்துகள், வான் வண்டிகள் வாடகைக்கு வழங்குபவராகச் செயற்படுதல்
(19) தனியார் வகுப்புக்களை நடத்துபவராகச் செயற்படுதல்
(20) நிதி முதலீட்டாளராகச் செயற்படுதல்
(21) கணனி ஆலோசகர்களாகச் செயற்படுதல்
(22) பல் சத்திர சிகிச்சை மருத்துவராகச் செயற்படுதல்
(23) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247"இ" பிரிவின்கீழ் வர்த்தக வியாபாரங்களாக வரி செலுத்தவேண்டியிருப்பினும் மேலே குறிப்பிடப்படாத வர்த்தக வியாபாரமொன்றைப் பேணி வருதல்

3-1058/1

---

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

காணி விற்பனை விடயம் சார்ந்த வரி அறவிடப்படுதல் - 2013

இலங்கைச் சட்டவாக்க சட்டக்கோவையின் 252 ஆம் அத்தியாயமாகிய மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(உ) எனும் பிரிவின்கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபையினால் 2013 ஆம் ஆண்டுக்காக சில காணிகள் விற்பனை செய்யப்படுதல் மீது வரி அறவிடப்படுதல்.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை நிருவாக எல்லையில் அமைந்துள்ள ஏதேனுமொரு காணியை ஒரு ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது ஊழியர் அல்லது அவரது பிரதிநிதி பகிரங்க ஏல விற்பனையில் அல்லது வேறொரு வகையில் விற்பனை செய்யும் பட்சத்தில் அவ்வாறு விற்பனையின் மூலம் கிடைக்கப்பெற்ற பணத்தில் நூற்றுக்கு ஒரு வீதத்திற்கு நிகரான வரியை விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது ஊழியர் அல்லது பிரதிநிதி சபைக்குச் செலுத்த வேண்டும்.

2012, ஒற்றோபர் 25 ஆந் திகதி நடத்தப்பட்ட மாநகர சபையின் 06-01 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிலும் அதனகத்துப் பின்னரும் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களை உரிய முறையில் பொதுமக்கள் அறிந்துகொள்வதற்காக வர்த்தமானி அறிவித்தல்களின் மூலம் பகிரங்கப்படுத்தப்படும் வரை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் பின்வரும் வகையில் சில காணி விற்பனை சார்ந்த விடயத்தில் வரி விதிக்கப்பட்டு அறவிடப்படுமென்பதை சகலரும் அறிந்துகொள்ளும் முகமாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சாந்தா பீ. லியனகே,
மாநகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.

மாநகரசபை அலுவலகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
இராஜகிரி,
2012, நவெம்பர் 05.

3-1058/2

---

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

வாகனங்கள் மற்றும் விலங்குகள் மீதான வரி அறவிடப்படுதல் - 2013

252 ஆம் அத்தியாயமாகிய மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 245, 246 ஆம் பிரிவுகளின்கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் 2013 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்பட்டு வாகனங்கள் மற்றும் விலங்குகள் மீது வரி அறவிடப்படுதல்.

2012, ஒற்றோபர் 25 ஆந் திகதி நடத்தப்பட்ட மாநகர சபையின் 06-01 ஆம் இலக்க மாநகரசபைத் தீர்மானத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிலும் அதனகத்துப் பின்னரும் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களை உரிய முறையில் பொதுமக்கள் அறிந்துகொள்வதற்காக வர்த்தமானி

அறிவித்தல்களின் மூலம் பகிரங்கப்படுத்தப்படும்வரை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் 2013 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்பட்டு அறவிடப்படவுள்ள வாகனங்கள் மற்றும் விலங்குகள் மீதான வரிக் கட்டணங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அறவிடப்படுமென்பதை சகலரும் அறிந்துகொள்ளும் முகமாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டுக்காக செலுத்தப்படவேண்டிய வரி 2013, மாச்சு 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டுமென மேற்கொண்டும் அறிவிக்கப்படுகின்றது.

சாந்தா பீ. லியனகே,
மாநகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.

மாநகரசபை அலுவலகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
இராஜகிரி,
2012, நவெம்பர் 05.

**அட்டவணை**

| | ரூபா ச. |
|---|---|
| மோட்டார் கார், முச்சக்கர மோட்டார் வாகனம்/மோட்டார் லொறி, மோட்டார் சைக்கிள் என்பவற்றுக்காக | 25 0 |
| சைக்கிள் மற்றும் ட்ரைசிக்கிள்/சைக்கிள் வண்டில் மற்றும் ட்ரைசிக்கிள் வண்டில் என்பவற்றுக்காக- | |
| (அ) அது வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுமானால் | 10 0 |
| (ஆ) அது வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படவில்லையெனில் | 5 0 |
| ஒவ்வொரு வண்டிலுக்காக | 20 0 |
| ஒவ்வொரு கைவண்டிலுக்காக | 10 0 |
| ஒவ்வொர ரிக்ஷோவுக்காக | 7 50 |
| ஒவ்வொரு குதிரை, போனிக்காக அல்லது கோவேறு கழுதைக்காக | 15 0 |
| ஒவ்வொரு யானைக்காக | 50 0 |

3-1058/3

---

**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை**

விளம்பர அறிவித்தல்களுக்காக கட்டணம் அறவிடப்படுதல் - 2013

இலங்கைச் சட்டவாக்கச் சட்டக்கோவையின் 252 ஆம் அத்தியாயமாகிய மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 541/17 மற்றும் 1989.01.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் உள்ளூராட்சி வீடமைப்பு, நிர்மாண அமைச்சின் செயலாளரினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தரப்படுத்தப்பட்ட துணைவிதிகளின் 90/ஏ பக்கம் 11 பகுதியின் விளம்பர அறிவித்தல்கள் பற்றிய ஏற்பாடுகளின் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபை எல்லையில் காட்சிப்படுத்தப்படுகின்ற விளம்பரப் பலகைகளுக்காக 2013 ஆம் ஆண்டின் பொருட்டு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் சபைக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

சாந்தா பீ. லியனகே,
மாநகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.

மாநகரசபை அலுவலகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
இராஜகிரி,
2012, நவெம்பர் 05.

***அட்டவணை***

***(அ) கட்டணங்கள் விதிக்கப்படுதல் மற்றும் அறவிட்டுக் கொள்வதற்கான விளம்பர அறிவித்தல் வகைகள் :***

*1.* ***நிலையான விளம்பர அறிவித்தல் பலகைகளுக்கான கட்டணங்கள் :***

*தெருக்களின் தரங்களுக்கமைய செலுத்தப்படவேண்டிய கட்டணம் :*

| | ரூபா ச. |
|---|---|
| (1) சிறப்புத் தரம் - வருடமொன்றுக்கு - ஒரு சதுர அடிக்கு | 250 0 |
| (2) ஏ தரம் - வருடமொன்றுக்கு - ஒரு சதுர அடிக்கு | 200 0 |
| (3) பீ தரம் - வருடமொன்றுக்கு - ஒரு சதுர அடிக்கு | 100 0 |
| (4) சீ தரம் - வருடமொன்றுக்கு - ஒரு சதுர அடிக்கு | 50 0 |
| (5) டி தரம் - வருடமொன்றுக்கு - ஒரு சதுர அடிக்கு | 50 0 |

*2.* ***விசேட அறிவித்தல் பலகைகளுக்காக செலுத்தப்படவேண்டிய கட்டணம் :***

| | |
|---|---|
| (1) கென்ட்றி : | |
| (i) முழுமையான ஒரு கென்ட்றிக்காக - வருடமொன்றுக்கு | 1,50,000 0 |
| (ii) பகுதியளவான ஒரு கென்ட்றிக்காக - வருடமொன்றுக்கு | 75,000 0 |
| (2) முக்காட்சிப் பலகைகளுக்காக - வருடமொன்றுக்கு - ஒரு சதுர அடிக்கு | 500 0 |
| (3) பதாதைகளுக்காக - மாதமொன்றுக்கு - ஒரு சதுர அடிக்கு | 75 0 |
| (4) கட்டவுட்களுக்காக - மாதமொன்றுக்கு - ஒரு சதுர அடிக்கு | 50 0 |
| (5) LED விளம்பரப் பலகைகளுக்காக - வருடமொன்றுக்கு - ஒரு சதுர அடிக்கு | 1,000 0 |

*3.* ***சுற்றுவட்டங்களுக்கான கட்டணங்கள்.- சுற்றுவட்டங்களைப் பராமரித்துப் பேணிவருகின்ற நிறுவனங்களுக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் :***

| | ரூபா ச. |
|---|---|
| சிறப்புத் தரத்திலான சுற்றுவட்டங்களுக்காக - வருடமொன்றுக்கு | 25,000 0 |
| ஏ தரத்திலான சுற்றுவட்டங்களுக்காக - வருடமொன்றுக்கு | 15,000 0 |
| பீ தரத்திலான சுற்றுவட்டங்களுக்காக - வருடமொன்றுக்கு | 5,000 0 |
| சீ தரத்திலான சுற்றுவட்டங்களுக்காக - வருடமொன்றுக்கு | 1,000 0 |

*4.* ***வீதிப்பெயர்ப் பலகைகளுக்கான கட்டணங்கள்.-*** *வீதிப் பெயர்ப்பலகைகளுக்காக ஒரு பெயர்ப்பலகையின் பொருட்டு வருடமொன்றுக்கு 1,500 ரூபா செலுத்தப்படுதல் வேண்டும். வர்த்தக அறிவித்தல்களின் வீச்சு - உச்ச மட்டம் 3 சதுர அடிகள்*

*5.* ***தனியார் வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்தப்படுகின்ற விளம்பர அறிவித்தல் பலகைகளுக்கான கட்டணங்கள் :***

*(1) குறித்த வர்த்தக நிறுவனத்தின் பெயரை மட்டும் காட்சிப்படுத்துகின்ற பெயர்ப்பலகை ஒன்றுக்காக 30 சதுர அடி உச்சமட்டத்திற்கு உட்பட்டு கட்டணம் அறவிடப்பட மாட்டாது. இதற்கு மேலதிகமான பெயர்ப்பலகைகளுக்காக நியமக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும்.*

*(2) இருப்பினும் குறித்த பெயர்ப்பலகையானது ஒளி வீசுகின்ற பெயர்ப்பலகையாக அமையும் பட்சத்தில் ஒரு சதுர அடிக்கு 75 ரூபாவிலான வருடாந்தக் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*(3) வர்த்தக நிலையத்தின் பெயர் உள்ளடங்கிய பெயர்ப்பலகையில், ஏதேனும் ஒரு வர்த்தகப் பண்டத்தின், ஏதேனும் ஒரு வர்த்தகப் பொருளின் வர்த்தகப் பெயர் அல்லது உற்பத்தி செய்த நிறுவனத்தின் பெயர் காட்சிப்படுத்தப்படுமானால், ஒரு விளம்பரப் பலகைக்காக உரிய நியமக் கட்டணத்தில் 50% செலுத்தப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமான அறிவித்தல் பலகைகளுக்காக நியமக் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*6.* ***மாநகர சபைக்குச் சொந்தமான வர்த்தகத் தொகுதிகளில் மற்றும் சந்தைகளில் வியாபாரங்களைப் பேணிவருகின்ற வியாபார உரிமையாளர்களால் காட்சிப்படுத்தப்படுகின்ற வர்த்தக அறிவித்தல்களுக்காகவும் பெயர்ப்பலகைகளுக்குமான கட்டணங்கள் :***

*(1) குறித்த இடத்தில் வர்த்தக வியாபாரங்களைப் பேணிவருகின்ற வர்த்தக நிறுவனத்தின் பெயர் உள்ளடக்கிய பெயர்ப்பலகையானது 20 சதுர அடி உச்ச எல்லைக்கு உட்பட்டு இருப்பின் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.*

(2) 20 சதுர அடி உச்ச எல்லைக்கு உட்பட்ட அத்தகைய பெயர்ப்பலகையொன்றில் ஏதேனும் ஒரு வர்த்தகப் பண்டத்தின், வர்த்தகப் பொருளின் வர்த்தகப் பெயர், உற்பத்தி நிறுவனத்தின் பெயர் காட்சிப்படுத்தப்படுமானால் ஒரு சதுர அடிக்கு 100 ரூபா வருடாந்தக் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

7. சபைக்குச் சொந்தமான சொத்துக்களிலும் கட்டடிங்களிலும் உள்ள விளம்பரப் பலகைகளுக்கான கட்டணங்கள்.- விளம்பரப் பலகைகளை காட்சிப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை ஆராய்தல் மற்றும் கட்டணங்களை அறவிடுதல் தொடர்பாக தீர்மானிக்கும் அதிகாரம் சபைக்கு உள்ளது.

(ஆ) விளம்பர அறிவித்தல்களுக்கான கட்டணங்களை விதிப்பதும், அறிவிடுவதும் பின்வரும் விடயங்களின் மீது அடிப்படையாக அமையும் :-

(1) ஏதேனுமொரு விளம்பர அறிவித்தல், பலகையின் ஒரு பக்கத்திற்கு மேலதிகமான பக்கங்கள் காட்சிப்படுத்தப்படுமானால் மேலதிக பக்கத்திற்காக/பக்கங்களுக்காக நியமக் கட்டணத்தில் 50% செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) விளம்பர அறிவித்தல் பலகைகள் தாபிக்கப்படுகின்ற இடங்களை தெருக்களுக்கமைவாக தரப்படுத்துதல் :

சிறப்புத் தரத்திற்கான தெருக்கள் :

ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை
ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, சமுத்திர தேவி கல்லூரி வீதி எல்லையிலிருந்து பாகொட வீதி ஆரம்பமாகும் இடம்வரை
ஹைலெவல் வீதி, விஜேராம சந்தி சபை எல்லையிலிருந்து நுகேகொட ஜம்புகஸ்முல்ல வீதி சபை எல்லை வரை
நாவல வீதி, நுகேகொட தொடக்கம் நாவல சேனாநாயக்க மாவத்தை எல்லை வரை

பழைய கெஸ்பாவ வீதி, நுகேகொட சுற்றுவட்ட எல்லையிலிருந்து புகையிரத குறுக்கு வீதி எல்லைவரை

''ஏ'' தரத்திற்கான தெருக்கள் :

எத்துள்கோட்டே தொடக்கம் ஜுபிலி கட்டை வரை ; ஜுபிலி கட்டை தொடக்கம் ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, பாகொட வீதி ஆரம்பமாகும் இடம்வரை. நாவல வீதி நகரசபை அலுவலக எல்லையிலிருந்து நாவல சேனாநாயக்க மாவத்தை வரை.

பழைய கெஸ்பாவ புகையிரத குறுக்கு வீதி எல்லையிலிருந்து தெல்கந்த சந்தி எல்லை வரை.

இரத்தபிட்டிய வீதி தெல்கந்த சந்தி எல்லையிலிருந்து நகரசபை எல்லை வரை.

பழைய கொட்டாவ வீதி, ஜுபிலி கட்டை சந்தி தொடக்கம் எம்புல்தெனிய எல்லை வரை மற்றும் உடஹமுல்ல வரை

பழைய கோட்டே வீதி ஆரம்பமாகும் இடத்திலிருந்து கொழும்பு மாநகரசபை எல்லை வரை

பீ தரத்திற்கான தெருக்கள் :

மாகாண சபைக்குச் சொந்தமான வீதிகள்

சீ தரத்திற்கான தெருக்கள் :

மாநகர சபைக்குச் சொந்தமான வீதிகள்

டி தரத்திற்கான தெருக்கள் :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏ, பீ, சீ தரங்களுக்குட்படாத சபை எல்லைக்குள் அமைந்துள்ள தனிப்பட்ட வீதிகள் அனைத்தும்.

(3) சகல விளம்பர அறிவித்தல்களையும் வெளியிடுவதற்கு 7 நாட்களுக்கு முன்னர் உரிய மாதிரிப்படிவத்தை விளம்பர அறிவித்தலின் நிழற்பிரதியுடன் சமர்ப்பித்து நகர ஆணையாளரின் அனுமதியுடன் உரிய கட்டணங்களைச் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) 2012, ஒற்றோபர் 25 ஆந் திகதிய பொதுச்சபையின் 06-01 ஆம் தீர்மானத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டுக்காக விளம்பர அறிவித்தல் பலகைகளை காட்சிப்படுத்துவதன் பொருட்டு மேலே காட்டப்பட்டுள்ள அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

3-1058/6

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபை

*வாகனங்களைத் தரித்து வைப்பதற்கான வரிஅறவிடப்படுதல் - 2013*

*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபையினால் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடங்களுக்காக 2013 ஆம் ஆண்டின் பொருட்டு பின்வரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு வாகனங்களிலிருந்து வரி அறவிடப்படுதல்*

*2012, ஒற்றோபர் 25 ஆந் திகதி நடத்தப்பட்ட மாநகரசபையின் 06-01 ஆம் இலக்க மாநகரசபைத் தீர்மானத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிலும் அதனகத்துப் பின்னரும் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களை உரிய முறையில் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக வர்த்தமான அறிவித்தல்களின் மூலம் பகிரங்கப்படுத்தப்படும் வரை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபையினால் 2013 ஆம் ஆண்டுக்காக வாகனத் தரிப்பிடங்களில் தரித்து வைக்கும் வாகனங்ளிலிருந்து பின்வரும் வகையில் வரி விதிக்கப்பட்டு அறவிடப்படுமென்பதை சகலரும் அறிந்துகொள்ளும் முகமாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*2013 ஆண்டுக்காக செலுத்தப்பட வேண்டிய வரி 2013, மாச்சு 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டுமென மேற்கொண்டும் அறிவிக்கப்படுகின்றது.*

*சாந்தா பீ. லியனகே,*
*மாநகர ஆணையாளர்,*
*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.*

*மாநகரசபை அலுவலகம்,*
*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,*
*இராஜகிரி,*
*2012, நவெம்பர் 05.*

### அட்டவணை

| | ரூபா ச. |
|---|---|
| லொரி/ பஸ்வண்டிகளுக்காக | 1000 0 |
| வான் வண்டிகளுக்காக | 500 0 |
| மோட்டார் வண்டிகளுக்காக | 500 0 |
| முச்சக்கர வண்டிகளுக்காக | 500 0 |
| மோட்டார் சைக்கிள், சைக்கிள்களுக்காக | 10 0 |

*3-1058/ 4*

---

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபை

*களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வரி அறவிடப்படுதல் - 2013*

*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள திரையரங்குகளிலிருந்து அறவிடப்படுகின்ற களியாட்ட வரி விகிதாசாரம் 7.5% ஆகும். இதற்கு மேலதிகமாக காட்சிப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு திரைப்படக் காட்சிக்கும், உதவி திரைப்படக் காட்சிக்கும், மாயாஜால வித்தைக் காட்சிக்கும், சர்க்கஸ் காட்சிக்கும் ஒவ்வொரு இசைக் கச்சேரிக்குமாக அச்சிடப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களுக்காக பெறுமதியில் 25% 2013 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்பட்டு அறவிடப்படுதல்.*

*2012, ஒக்டோபர் 25 ஆம் திகதி நடத்தப்பட்ட மாநகரசபையின் 06- 01 ஆம் இலக்க மாநகரசபைத் தீர்மானத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிலும் அதனகத்துப் பின்னரும் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களை உரிய முறையில் பொது மக்கள் அறிந்து கொள்வாற்காக வர்த்தமானி அறிவித்தல்களின் மூலம் பகிரங்கப்படுத்தப்படும் வரை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் 2013 ஆம் ஆண்டுக்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள களியாட்ட வரி விதிக்கப்பட்டுள்ளதென்பதை சகலரும் அறிந்துகொள்ளுமுகமாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஒவ்வொரு காட்சிக்கும் முன்னர் இந்த வரி செலுத்தப்பட வேண்டுமென இத்தால் மேற்கொண்டு அறிவிக்கப்படுகின்றது.*

*3-1058/ 5*

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபை

*பகிரங்க அரங்காற்றல் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் – 2013*

*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைக்குள் அரங்கேற்றப்படுகின்ற பகிரங்க அரங்கேற்றங்கள் மற்றும் களியாட்டங்களுக்காக இருக்கைகளின் எண்ணிக்கையின் பிரகாரம் அறவிடப்படுகின்ற பகிரங்க அரங்கேற்றங்கள் மற்றும் களியாட்டங்கள் என்பவற்றுக்கான கட்டணமானது 2012, ஒற்றோபர் 25 ஆந் திகதிய பொதுச்சபையின 06-01 ஆம் இலக்கத் தீர்மானத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டுக்காக பின்வருமாறு செலுத்தப்படுதல் வேண்டும்.*

| இருக்கைகளின் எண்ணிக்கை | ஒரு நாளைக்கான கட்டணம் ரூ.ச. | ஒரு மாதத்திற்கான கட்டணம் ரூ.ச. | ஒரு வருட கட்டணம் ரூ.ச. |
|---|---|---|---|
| 199 இருக்கைகளை விஞ்சாத போது | 50 0 | 100 0 | 500 0 |
| 199 இருக்கைகளுக்கு மேல் 400க்கு குறைவு | 75 0 | 200 0 | 800 0 |
| 400 இருக்கைகளுக்கு மேல் 500க்கு குறைவு | 100 0 | 400 0 | 120 0 |
| 500 இருக்கைகளுக்கு மேல் | 150 0 | 6000 0 | 12,000 0 |

*சாந்தா பீ. லியனகே,*
*மாநகர ஆணையாளர்,*
*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.*

*மாநகரசபை அலுவலகம்,*
*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,*
*இராஜகிரி,*
*2012, நவெம்பர் 05.*

*3-1058/7*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.